செ. வெ. எண் : 1019 நாள் : 19.11.2010

**பத்திரிக்கைச் செய்தி**

நடப்பு நவம்பர் மாத மத்தியில் தொடங்கி ஜனவரி 2011 மூன்றாவது வாரம் வரை நடைபெறவிருக்கும் சபரி மலை மண்டல விளக்கு பூஜை மற்றும் மகர ஜோதியை முன்னிட்டு தமிழகத்திலிருந்து சபரிமலைக்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு வெகுவாக அதிகரித்துகொண்டே வருகிறது. அவ்வாறு செல்லும் பக்தர்கள் ஒப்பந்த ஊர்த்திகளிலும் சரக்குகள் ஏற்றிசெல்லக்கூடிய லாரிகளிலும் சென்று வருகின்றனர். கடந்த காலங்களில் இவ்வாறு பக்தர்களை ஏற்றி சென்ற லாரிகள் விபத்துக்குள்ளாகி பக்தர்கள் உயிரிழந்த சம்பவங்கள் பல நடந்துள்ளன. எனவே சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் லாரிகளில் செல்ல அனுமதிக்க வேண்டாம் எனவும் அத்தகைய லாரிகளை சோதனை சாவடிகளை கடந்து செல்ல அனுமதிக்க வேண்டாம் எனவும் மாநில எல்லையோர போக்குவரத்து சோதனை சாவடி மோட்டார் வாகன ஆய்வாளர்கள் (தொ.நு.அ)அறிவுறுத்தப்படுள்ளார்கள். மேலும் பக்தர்கள் செல்லும் பயணிகள் ஒப்பந்த ஊர்திகளை கண்காணித்து மோட்டார் வாகன சட்ட விதி முறைகளுக்கு முரணாக அதிக பயணிகள் ஏற்றுவது உள்ளிட்ட குற்றங்களுடன் தென்படும் வாகனங்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள தமிழகத்தில் உள்ள அனைத்து களப்பணியாளர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் லாரிகளில் செல்லவேண்டாம் எனவும் பாதுகாப்பான பயணிகள் வாகனங்களில் மட்டும் சென்றுவர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

போக்குவரத்து ஆணையர்
சென்னை-5.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9